செ.வெ.எண்: 31 நாள்:28.08.2020

# அரியலூர் மாவட்டம்

# கொரோனா பரிசோதனை முடிவுகளை அறிந்துகொள்வதற்கான இணையதள சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோவிட்-19 கொரோனா பரிசோதனை செய்தவர்களுக்கு பரிசோதனை முடிவு சான்றிதழை தேசிய தகவலியல் மையம் (NIC) மூலம் உருவாக்கப்பட்ட இணையதள மென்பொருள் வாயிலாக சான்றிதழ் பெறுவதற்கான சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (28.08.2020) துவக்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிகள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தீவீரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 27.08.2020 அன்று வரை நமது மாவட்டத்தில் 35,323 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, 2,452 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு, அதில் 1,645 நபர்கள் பூரண குணமடைந்து அவர்களது இல்லங்களுக்கு சென்றுள்ளனர். மீதமுள்ள 779 நபர்களில் 421 நபர்கள் அவர்களது இல்லங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், 358 நபர்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா பரிசோதனை செய்பவர்களுக்கு பரிசோதனை முடிவு சான்றிதழ் இன்று முதல் ஆன்லைன் வலைதளம் வாயிலாகவும், பரிசோதனை முடிவுகள் குறுஞ்செய்திகளாக 26.08.2020 முதல் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படுகிறது. தற்போது வரை நமது மாவட்டத்தில் 1000-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டுள்ளது. கொரோனா பரிசோதனை முடிவுகள் (48 மணி நேரத்திற்குள்) வந்தவுடன் https://ariyalur.nic.in என்ற வலைதள முகவரிக்கு சென்று **"தங்களது கோவிட்-19 பரிசோதனை முடிவுகள் பெற"** அல்லது **"To Get Your Covid-19 Test Result"** என்ற இணைப்பை பயன்படுத்தி பிரதி எடுத்துக்கொள்ளலாம். இதற்கு தனி நபர்களுக்கு குறுஞ்செய்தியில் அனுப்பட்டுள்ள SRF ID-ஐ உள்ளீடு செய்ய வேண்டும். அந்த பிரதியில் உண்மை தன்மையை உறுதி செய்வதற்கு QR Code இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பரிசோதனை செய்தவர்கள் தங்களது பெயர் மற்றும் SRF Number-ஐ பயன்படுத்தி உறுதி செய்து கொள்ளலாம். பரிசோதனை தரவுகள் அனைத்தும் அரசு நிறுவனமான தேசிய தகவலியல் மையத்தில் பராமரிக்கப்படும் சர்வர் மூலமாக பாதுகாக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

மேலும், பொதுமக்கள் விழிப்புடன் இருந்து தேவையற்ற பயணங்களை தவிர்த்து, முககவசம் அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடித்து, கிருமி நாசினி கொண்டு வீடுகளை சுத்தம் செய்து கொரோனா பரவலை தவிக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் எடுக்கப்படும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

அதனைத்தொடர்ந்து, கொரோனா பரிசோதனை மேற்கொண்ட நபர் ஒருவருக்கு இணையதள சேவையை பயன்படுத்தி கொரோனா பரிசோதனை முடிவிற்கான சான்றிதழை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், தேசிய தகவலியல் அலுவலர்கள் எஸ்.ஜான் பிரிட்டோ, டேவிட் ஜோசப் ராஜ், கணினி பொறியாளர் வெற்றிவேந்தன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**